**RECORD OF DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, UTHANGARAI**

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாட்சி திறந்த நீதிமன்றத்தில் இன்று 02.08.2023 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு உரிமையியல் விசாரணை முறைச்சட்ட பிரிவின் கீழ் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| Case | : O.S.No. 59/2016 | CNR.No | : | TNKI13-000551-2016 |
| Name | : சங்கீதா | கணவர் பெயர் | : | ராமமூர்த்தி |
| Witness for | : Plaintiff | Calling | : | PW1 |
| Age | : 32 | Village | : | நாய்கனூர் |
| Taluk | : ஊத்தங்கரை | District | : | கிருஷ்ணகிரி |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் **2015 ல்** காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் என்னவென்று புகார் கொடுத்தேன் என்றால் எங்களுக்கு வழி விடவில்லை என்றும் தண்ணீர் எடுக்கும் போது பிரச்சனை செய்கிறார்கள் என்று புகார் கொடுத்தேன். நான் பெருமாளிடமிருந்து **1 1/2 ஏக்கர்** வர வேண்டும் என்றும் அதை ஏமாற்றிவிட்டார் என்று தான் புகார் அளித்தேன் என்றால், சாட்சி **வா.சா.ஆ.6** ஐ படித்துவிட்டு, ஆமாம் அவ்வாறு தான் கொடுத்தேன் என்று சாட்சியம் அளிக்கிறார் . தற்போது நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் நான் **1 1/2 ஏக்கர்** மோசடியாக பெற்ற நிலத்தை மீட்டு தரவேண்டும் என்று கேட்டுள்ளேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை, **2015 ல்** தாக்கல் செய்தேன். வழக்குரையை வாதி பார்த்துவிட்டு அவ்வாறு கேட்டு நான் தாக்கல் செய்யவில்லை என்று பதில் அளிக்கிறார் . **வா.சா.ஆ.6** காண்பிக்கப்பட்டு, 10 நபர்கள் அபகரித்துவிட்டார்கள் என்றும் அதை மீட்டு தர வேண்டும் என்று தான் கேட்டுள்ளேன் என்றால் சரிதான் . நான் எனது வழக்குரையில் **வா.சா.ஆ.6** ல் சொல்லியுள்ளது போல் 10 நபர்கள் அபகரித்து விட்டார்கள் என்ற சங்கதியை இந்த வழக்கில் சொல்லியிள்ளேனா என்றால் இல்லை, எனக்கு வழி விட மறுக்கிறார்கள் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். **வா.சா.ஆ.6** ல் மின் இணைப்பு எண் **145** ல் எனக்கு

பாத்தியம் உள்ளது என்றும் அதை பிரதிவாதிகள் தடுக்கிறார்கள் என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை ஆனால் மோட்டார் , பம்பு செட், கிணறு, வழி பைப் அனைத்தையும் என்னுடைய தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்றும் மேற்கண்ட அனைத்தையும் என்னுடைய பெரியப்பா பெருமாள் என்பவரும் , அவருடைய குடும்பத்தாரும் அபகரித்துள்ளனர் என்று நான் புகார் கொடுத்தேன் . புகாரில் அபகரிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளவற்றை மீட்டு தர கோரி இந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன்.

2. **வா.சா.ஆ.6** ன் பேரில் காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றதாக என்றால் நடைபெற்றது . நாங்கள் எங்கள் தரப்பு ஆவணங்களையும் பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களையும் புலன் விசாரணையின் போது கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள் . போலிஸ் விசாரணையில் என்ன முடிவு செய்யப்பட்டது என்ற விவரத்தை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை . நான் கொடுத்து பொய் புகார் என்பதால் தான் அந்த விசாரணை முடிவை சொல்லவில்லை என்றால் சரியல்ல . போலிசார் உரிமையியல் நீதிமன்றத்தை அனுகி பரிகாரம் தோடி கொள்ள அறிவுறுத்தினார்கள்.

3. **1997 ல் முதல் 2015** வரை நானோ எனது அம்மாவோ பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்று சொல்லும் நிலையில் அவர்களுக்கு எதிராக புகார் ஏதேனும் கொடுத்தோமா என்றால் அம்மா கொடுத்திருப்பார் எனக்கு தெரியவில்லை, நான் **2015 ல்** புகார் கொடுத்தேன். **வா.சா.ஆ.5 ல்** பத்திரத்தில் கண்டுள்ள நபர்களுக்கு மட்டும் தான் வண்டி வழி பாத்தியம் என்றும் நாங்கள் எப்போதும் அதை பயன்படுத்தி வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மாவும் , எனது பெரிப்பாவும் சேர்ந்து எனது தாத்தா பேரில் வாங்கினார்கள் அதனால் அவர்களுடை வாரிசுகளுக்கும் பாத்தியம் உண்டு.

4. எனது தாத்தா எப்போது இறந்தார் என்றால் நான் வழக்கு தாக்கல் செய்து சுமார் **2-3** ஆண்டுகளுக்கு பிறகு இறந்தார் . எனது தாத்தா பொன்னுசாமி எனது பெரிப்பா பெருமாளுக்கு எப்போது எவ்வளவு நிலம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனது பெரியப்பா பெருமாள் மோசடியாகவும், விரோதமாகவும் எனது தாத்தாவை பயன்படுத்தி

எங்களுக்கு தானம் கொடுத்தது போக மீதம் இருந்த அனைத்து சொத்துக்களையும் மோசடியாக எழுதி வாங்கிக்கொண்டார். மோசடியாக வாங்கினார் என்று சொல்லும் நிலையில் மேற்படி ஆவணங்களை ரத்து செய்யவும் அதில் பங்கு உள்ளது என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் வழக்கில் மோசடியாக எழுதி வாங்கியுள்ளார் என்று சொல்லியுள்ளேன். **வா.சா.ஆ.5** கண்டுள்ள சொத்திற்கு ஒட்டினார் போல் எந்த திசையில் **வா.சா.ஆ.5** ல் கண்டுள்ள வண்டி வழி பாதை உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. எனது வழக்குரையில் A அட்டவணை சொத்திற்கு எந்த திசையில் B **அட்டவணை** சொத்து உள்ளது என்று விவரம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

5. நான் **வா.சா.ஆ.5** ல் கண்டுள்ள தரப்பினர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் 10 நபர்கள் வழக்கில் இருக்கிறார்கள் என்று சொல்லியுள்ளேன். **வா.சா.ஆ.5** பத்திரம் எழுதும் காலத்தில் தான் பாதை பொதுவாக அமைக்கப்படுகிறது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் ஓனியாக பாதை ஏற்கனவே சென்றுக்கொண்டிருந்தது. **வா.சா.ஆ.1 ல்** கொடுத்த நிலத்தில் வண்டி பாதைக்காக ஏதேனும் பகுதி விடப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. **வா.சா.ஆ.5 ல்** வண்டி வழி பாத்திய பத்திரத்தில் நானோ எனது அம்மாவோ தரப்பினர்களாக இல்லை என்று சொன்னால் சரிதான், நான் அப்போது சிறு வயதாக இருந்தேன் எனக்கும் , எனது அம்மாவிற்கும் சேர்த்து தான் எனது தாத்தா வாங்கினார்.

6. எனது வழக்கிலோ அல்லது எனது முதல் விசாரணை பிரமாணபத்திரத்திலோ **B** அட்டவணை சொத்தில் இருந்து **A** அட்டவணை சொத்திற்கு எப்படி பயனித்து எந்த திசையில் செல்கிறோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை . கிணற்றில் ஆயில் இன்ஜின் மூலம் **1/3** தண்ணீர் இறைக்கும் பாத்தியம் மட்டும் தான் எனக்கு உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் அதை பிரதிவாதிகள் தடுத்ததில்லை என்று சொன்னால் சரியல்ல , ஆயில் இன்ஜின் இல்லை அதை விற்று மின் மோட்டார் வாங்கிவிட்டார் . நான் ஆயில் இன்ஜின் தண்ணீர் எடுத்து வருவதை பிரதிவாதிகள் தடுக்கவில்லை என்று சொன்னால் பட்டாவில் இருந்ததை எழுதினோம்,

மின் மோட்டார் எடுத்து வருவதை தடுக்கிறார்கள். மின் மோட்டார் வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்பு வாங்கப்பட்டதா என்றால் இல்லை . எனது வழக்குரையில் மின் இணைப்பு எந்த வருடம் வாங்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல . கடந்த **25.05.2016–ம்** தேதி கிணற்றில் தண்ணீர் எடுக்க கூடாது என்று பிரதிவாதிகள் தடுத்ததாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகளை அலக்களிப்பதால் பிரதிவாதிகளுக்கு நஷ்ட ஈடு , இலப்பீடு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

சாட்சியின் வாக்குமூலம் என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு, சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியென ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

G AMAR ANAND
DISTRICT MUNSIF, UTHANGARAI
Digitally signed by G AMAR ANAND
Location: KRISHNAGIRI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஊத்தங்கரை.